## தேசம் காக்க...

சத்குரு



# நமது 3 கடமைகள்!

"தேசம் என்பது தெய்வம் தந்த வரமல்ல... நாம் ஒன்றுபட்டு உருவாக்கிய எண்ணம் அது!" என்கிறார் சத்குரு.



**கேள்வி:**

"தாய் தேசத்துக்காக செய்யக்கூடிய மூன்று கடமைகளைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறேன்! அது பற்றி விளக்கிக் கூற முடியுமா?"

**சத்குரு:**

"நாம் 'தேசம்' என்று சொல்லும்போது, ஒரு நில அமைப்பினைப் பற்றி பேசவில்லை. அரசியல் அமைப்பு கொண்ட நிறுவனத்தைப் பற்றி பேசவில்லை. மக்களைப் பற்றி பேசுகிறோம். மக்கள்தான் தேசத்தை ஆக்குகிறார்கள். மக்களின் மனங்களிலும், இதயங்களிலும்தான் ஒரு தேசம் வாழ்கிறது. நிலம் என்பது பூமிக்குரியது. அது எந்த தேசத்துக்கும் சொந்தமானதல்ல! நமது இதயங்களிலும், மனங்களிலும் மட்டுமே தேசம் உள்ளது. ஏனெனில், மனிதனால் முழு உலகத்தையும் ஒன்றாய் பார்த்து வாழ இயலுவதில்லை.

ஒருகூட்டத்தைச் சேர்ந்த மக்கள் அடையாளம் கொள்வது அவர்களுடைய தேசத்துடன்தான்! அதனால், தேசம் எனும் அந்த உணர்வு எத்தனை முக்கியமானது? அங்கு வாழும் மனிதர்களைப் பொருத்த விஷயம் அது! பல நிலைகளில், தேசத்தின் பரிமாண நிலைகளில், நாம் எத்தனை தேசப்பற்றுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதைப் பொறுத்து அளவீடு செய்ய வேண்டும்.

சுதந்திரத்துக்கு முன்னால், நமது தேசிய உணர்வானது தீயில் இட்டது போல் இருந்தது. ஏனென்றால், அப்போது நலமாய் வாழ்வதைப் பற்றிய போராட்டமாய் அது இருக்கவில்லை. தேசத்துக்காக உயிர் தியாகம் செய்வதைப் பற்றி இருந்தது. அதனால்தான் தேசப்பற்றும், நமது தேசியமும் தீயில் இட்டதைப் போல் இருக்க வேண்டும். ஏனெனில், நாம் பிறரின் ஆதிக்கத்தில் இருந்தோம். ஆனால், சுதந்திரத்துக்கு பின்னால், நம்முடைய தேசிய உணர்வை சற்றே நாம் ஆசுவாசப்படுத்திக்கொள்ளலாம். முன்பு இருந்த அளவுக்கு நாம் கொந்தளிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால், இந்த நாட்டிலுள்ள மக்களில் பாதி பேர் சரியாக உணவு அருந்திருக்காதபட்சத்தில், மற்றது அனைத்தையும் மறந்துவிடலாம். மனித நலத்தில் வேறெந்த அம்சத்தைப் பற்றியும் நாம் கவலை கொள்ளவில்லை. அவர்கள் கல்வி கற்றிருக்கலாம், கற்காமல் போகலாம். வீடு இருக்கலாம், மரத்தின் கீழ் வாழலாம். நல்ல உடை உடுத்தலாம், கந்தல் ஆடையை அணியலாம். கார் ஓட்டலாம், நடந்து செல்லலாம். இத்தகைய எதைப் பற்றியும் எனக்கு கவலை இல்லை. ஆனால், எல்லா மனிதர்களும் சரியான ஊட்டச்சத்துடன் இருக்க வேண்டும். இது மிக அடிப்படையான



விஷயம்!

இதுநிச்சயம் நிகழவேண்டும். துரதிர்ஷ்டமாக நடக்கவில்லை. ஊட்டச்சத்து பற்றாக்குறையால் உலகில் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளில் பாதி பேர் நம் நாட்டில் உள்ளனர். உலகிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடு. இந்தவொரு குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதரும் தனக்கு தேவையானதை உண்ண வழி செய்ய வேண்டும்.

கடினமான உழைப்புக்கு தேவையான சாப்பாடு இல்லாமல் விவசாயி வயல்வெளிக்கு வேலைக்குச் செல்கிறார். தனக்கு போதிய 'போஷாக்கு' இல்லாமல், தன் குழந்தைக்கு போதிய ஊட்டச்சத்து இல்லாமல், ஒரு பெண் வயிற்றில் கருவைச் சுமக்கிறாள். விழிப்பாய் இருந்து, கல்வி கற்க போதிய ஊட்டச்சத்து இல்லாமல் குழந்தை பள்ளிக்கூடத்துக்குச் செல்கிறது. இதுபோன்ற விஷயங்கள் நடக்கையில், தேசம் பற்றிய நமது உணர்வு சற்று பலமாய் இருப்பது மிக முக்கியம். நம் இதயத்தில் ஏதோவொன்று துடிக்க வேண்டும். நம் வயிற்றிலும் ஏதோவொன்று எரிய வேண்டும்.

இவ்விஷயங்கள் எல்லாம் சரிகட்டப்பட்டு மக்கள் எல்லாம் நலமாய் வாழும்போது, நாம் நெருப்பை குறைத்துக்கொள்ளலாம். தேசம் ஆபத்தில் இருக்கும்போது இந்த உணர்வுத் தீயை அதிகப்படுத்தலாம். தினசரி வாழ்க்கையில் சற்றே ஆசுவாசப்படுத்தலாம். அதுவரையிலும் இதே விவேகம் நமக்கு இருக்க வேண்டும். ஆனால், தற்போது மக்கள் தொகையில் பாதி பேர் சரியாய் உணவு உண்ணாதபட்சத்தில், 'நமக்கு தேசப்பற்று தேவையில்லை. இந்த தேசத்துக்காக நாம் உணர்ச்சிவயப்பட தேவையில்லை. அதில் என்ன இருக்கிறது? உலகம் ஒன்றுதான்!' என்றெல்லாம் பேசுகிறார்கள். உலகம் ஒன்றுதான்... எனக்கும் அதில் உடன்பாடுதான். ஆனால், அதில் எதார்த்தம் இல்லையே! அரசியல், பொருளாதார ரீதியாய் உலகம் ஒன்று என்று நாம் பேசுவதில் உண்மை இல்லையே!!

பல தேசங்களில் சும்மா வீசி எறியும் பொருட்கள் கிடைத்தாலே பல





குழந்தைகளின் ஊட்டச்சத்து சரி செய்யப்படும். இதுதான் நிலை என்று இருக்கும்போது, 'ஒன்றே உலகம்' என்றெல்லாம் நீங்கள் பேச முடியாது. பகட்டான, பிரமாண்டமான எண்ணங்கள்... அவ்வளவுதான்! நான் அவற்றுக்கு எதிரானவன் அல்ல. எனக்கும் அவற்றில் உடன்பாடு உண்டு. ஆனால், தற்போதைய காலகட்டத்தில் அவை எதார்த்தமாய் இல்லை. நமக்கு மிக தீவிரமான தேசப்பற்று தேவை. ஏனெனில், இந்த தேசத்தில் உள்ள பாதி பேருக்கு இன்னும் சரியாக உணவு கிடைக்கவில்லை.

நீங்கள் இன்றைய உணவை ரசித்து சாப்பிடக்கூடாது என்பதற்காக இதைச் சொல்லவில்லை. உங்கள் உணவை ரசியுங்கள். 'பலருக்கும் கிடைக்காத உணவு, எனக்கு உண்ணக் கிடைத்திருக்கிறதே! நான் உணவை ரசிக்க மட்டும் கூடாது. அதனை என் வாழ்வில் சிறப்பாய் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்கிற எண்ணம் வேண்டும் இல்லையா? நம் இதயத்தில் சற்றே வலி ஏற்பட வேண்டும் அல்லவா?

'நான் சிறப்பாய் உண்கிறேன். இது எனக்குள் சென்று, என்னுள் ஒரு பாகமாய் மாறி... எனது நல்வாழ்வுக்கும், செயல்களுக்கும் உதவ வேண்டும். எனது பிள்ளைகள் இரவு என்ன உண்ண வேண்டுமோ அதை உண்ணாமல் உறங்கச் செல்கிறார்களே என்ற வலியை நாம் உணர வேண்டும்.

மறுபடியும் சொல்கிறேன்... நீங்கள் உணவு உண்பதைக் குலைப்பதற்காக இதைச் சொல்லவில்லை. உண்ணும் உணவின் மதிப்பைக் கூட்டுவதற்காக சொல்கிறேன். நீங்கள் உண்பதைப் பற்றி குற்ற உணர்ச்சி ஏற்படுத்துவதற்காகவும் இதைச் சொல்லவில்லை. மிருகத்தைப் போல் அல்லாமல் மனிதனாக உண்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சொல்கிறேன்.

சுதந்திர, குடியரசு தினங்களில் நீங்கள் எங்கே இருந்தாலும் சரி... எங்கு நமது தேசியக்கொடி பறக்கிறதோ அதற்கு மனதார மரியாதை செய்யுங்கள். ஒரு



கொடியை வாங்கி வீட்டில் பறக்க விடுங்கள். 'சரி... இதனால் தேசத்திலுள்ள எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா?' என்று சிலர் கேட்கலாம். பிரச்சினைகள் தீரும் என்று யார் சொன்னார்கள்? ஆனால், எல்லா குடிமக்களும் ஒன்று சேர்ந்து, தேசத்தின் பிரச்சினையை தீர்க்க முற்படுவார்கள் என்றால் நிச்சயம் மறையும். ஓ... செய்யக்கூடிய மூன்று விஷயங்கள் பற்றி நீங்கள் கேட்டீர்கள் அல்லவா? நான் இரண்டைத்தான் சொல்லி இருக்கிறேன்.

இன்னொன்றை நீங்கள் கண்டுபிடியுங்கள். வெவ்வேறு மனிதர்கள், வெவ்வேறு விஷயங்களை நினைக்கிறார்கள். சிலர் சுற்றுச்சூழல் மாசு என நினைக்கிறார்கள். சிலர் ஊழல் என்று நினைக்கிறார்கள். சிலர் செயல்திறன் குறைபாடு என்று நினைக்கிறார்கள். ஆம்... இந்த தேசத்தில் நடக்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் இதுவென்று பலரும் பல விஷயங்களை நினைத்துக்கொள்கிறார்கள். ஒழுக்கம் தேவை என்று நினைத்தால், நீங்கள் ஒழுக்கத்தை வெளிப்படுத்துங்கள். ஊழல் அகல வேண்டும் என நினைத்தால், முதலில் நீங்கள் ஊழலற்றவராக இருப்பதை உறுதி செய்யுங்கள். சுற்றுச்சூழல் சீர்கேடு என்று நினைத்தால், சுற்றுச்சூழல் மாசு உருவாக்குபவராக நீங்கள் இருக்காதீர்கள்.

ஆமாம்... குறைகளாக என்ன நினைக்கிறீர்களோ... அதற்கான காரணமாகாதீர்கள். உங்களால் எல்லாவற்றையும் நிறுத்த முடியாமல் போகலாம். இயன்றால், உங்களால் எடுத்துச் சொல்லி மாற்றக்கூடிய மக்களையும் அந்தப் பிரச்சினையின் ஊற்றுக் கண்ணாக அவர்கள் இல்லாதவாறு இருக்கச் சொல்லுங்கள்.

அட... மூன்றாவதையும் சொல்லிவிட்டேனா?

நாம் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும் – தேசம் என்பது கடவுள் கொடுத்ததால் அல்ல. நாம் இதனை உருவாக்கினோம். அதனால்தான் இது முக்கியம் இல்லையா? நாடு என்ற உணர்வில் நாம் ஒன்றுபடும்போது நம்முடைய தனிப்பட்ட வரையறைகளை தாண்டி வளர முடிகிறது. உலகம் முழுவதுமே தனிப்பட்ட மனிதர்கள், தேச உணர்வு கொண்டதால்... தேசத்துக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்ததால் பன்மடங்கு உயர்ந்திருக்கிறார்கள். பெண்களும் ஆண்களும் தேசத்துக்காக தங்களது உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள்.

'மனிதர்கள் ஒன்றாக வாழ்வது தேவைதானா? தேவையில்லை... தேவையில்லை!' என்று நினைத்துக்கொண்டே இருக்காமல்... அதுவொரு தொலைநோக்கு அவசியம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அதுமட்டுமல்ல... தற்சமயம் நீங்கள் சிக்கிப் போய் உள்ள சொந்த வரையறைகளை கடந்து போவதற்கு மிகச் சுலபமான உபாயம் அது என்பதையும் அறிந்திடுங்கள்.

இவற்றை நிச்சயம் கடைபிடியுங்கள்... தேசத்திலுள்ள ஒவ்வொரு குழந்தையும் போதிய ஊட்டச்சத்தைப் பெறும்வரை!

## வித்தியாசமான அணுகுமுறை!

ஒரு நிறுவனத்தில் கல்வித் தகுதியிலும், நிறுவனத் தேர்விலும், நேர்காணலிலும் இரண்டு இளைஞர்கள் சமமாகவே மதிப்பெண்கள் பெற்றிருந்தார்கள். 'அதில் யாரைத் தேர்வு செய்வது? யாரைத் தவிர்ப்பது?' என்று நிர்வாகம் தவித்தபோது இருவரையும் அழைத்து ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள்.

"இந்த வேலை கிடைக்காவிட்டால் நீ என்ன நினைப்பாய்? எப்படி உணர்வாய்?" என்றபோது,

"என்ன நினைப்பது... 'நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!' என்று நினைத்துக்கொள்வேன்" என்கிறான் முதல் இளைஞன்.

அடுத்த இளைஞனுக்கும் அதே கேள்வி. அதற்கு அவன் சொன்ன பதில், "உங்கள் நிறுவனம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! வேறென்ன நினைப்பது?

இரண்டாவது இளைஞனே தேர்ந்தெடுக்கப்படுகிறான்.

காரணம்... இது வித்தியாசமான பதில் மட்டுமல்ல... நம்பிக்கை மிகுந்த விவேகமான பதிலும்கூட! இதுதான் சிலரின் வெற்றி ரகசியம்!!

– ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்